**(2024-25-**ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 3 )

**SUBJECT CODE** **24 PTM 414**

**REG.NO:**

## என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) :: பொள்ளாச்சி

பருவ இறுதித் தேர்வுகள் : மே - 2026

எம். ஏ. தமிழ் இலக்கியம் மதிப்பெண்கள் : 75

நான்காம் பருவம் நேரம் : 3 மணி

## தொன்மை இலக்கியம்

**பகுதி – அ** **(10x1=10** மதிப்பெண்கள்)

பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (K1)

1. வரம்பு என்பதின் பொருள் யாது?

அ) எல்லை ஆ) மலை இ) கடல் ஈ) உலகம்

2. நற்றிணையின் அடி வரையறை எத்தனை?

அ) 6-12 அடிகள் ஆ) 8- 14 அடிகள் இ) 3-9 அடிகள் ஈ) 9-12 அடிகள்

3. செவ்வேள் எனப் போற்றப்படுபவர்

அ) திருமால் ஆ) முருகன் இ) சிவன் ஈ.) பிரம்மா

4. பதிற்றுப் பத்தின் ஒன்பதாம் பத்தின் பாட்டுடைத் தலைவன் பெயர் என்ன?

அ) ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் இ) இளஞ்சேரல் இரும்பொறை

ஆ) இமயவரம்பன் ஈ) செல்வக்கடுங்கோ

5. ஐந்திணை ஐம்பதின் ஆசிரியர்

அ) மாறன் பொறையனார் இ) மாங்குடி மருதனார்

ஆ) பொய்கையார் ஈ.) நக்கீரர்

கீழ்க்காணும் அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக. (K2)

6. எட்டுத்தொகை அகநூல்களுள் 4 அடி முதல் 8 அடி வரை அடிவரையறை பெற்ற நூல் எது?

7. மதுரைக் காஞ்சியின் ஆசிரியர் யார் ?

8. கலிப்பாவின் ஓசையைச் சுட்டுக.

9. புறநானூறுக்கு வழங்கப் பெறும் வேறுபெயர்கள் யாவை?

10. பழவினை, முற்பிறவிப் பயன் - என்பதைக் குறிக்க **வள்ளுவர் கையாளும்** சொல் யாது?

**(த.பி.பா.)**

## பகுதி – ஆ ( **5 X 5 = 25** மதிப்பெண்)

**பின்வரும் வினாகளுக்கு இரண்டு பக்க அளவிற்கு விடையளிக்க.** **(K3)**

11. அ). மதுரைக்காஞ்சி - குறிப்புவரைக.

(அல்லது)

ஆ). வேந்தரும் வேளிரும் தாக்கிய போரில் நாற்படை நடத்தி வெற்றி கண்ட பாட்டுடைத் தலைவனின் வீரத்தை எடுத்துரைக்க.

12. அ). "நின்றசொல்லர்; நீடுதோன்றினியர்" - எனும். நற்றிணைப் பாடல் வழி வெளிப்படும் தலைவியின் நம்பிக்கையைப் புலப்படுத்துக.

(அல்லது)

ஆ). தலைவியின் பிரிவாற்றாமையை “யாமெங் காமந் தாங்கவும்” எனும் குநற்தொகைப் பாடல் வழிக் கூறுக.

13. அ) பொருளீட்டுவதற்காகத் தலைவியைப் பிரியக் கருதிய தலைவனுக்கு, தோழி உரைத்தனவற்றைப் பாலைக் கலிப் பாடலின் வழி எடுத்துரைக்..

(அல்லது)

ஆ). இரவுக்குறி வருவதாகக் கூறிய தலைவனிடம், தோழி வரைவு கடாவியதை அகநானூற்றுப் பாடல் வழி விளக்குக.

14. அ) பதிற்றுப்பத்து – நூற்குறிப்பு தருக.

(அல்லது)

ஆ). "தாயில் தூவாக் குழவி போல" - என்ற உவமையால் பரணர் விளக்கும் புறநானூற்றுச் செய்தியைக் கூறுக.

15. அ) ஐந்திணை ஐம்பது குறித்து விளக்குக.

(அல்லது)

ஆ). வாய்மை குறித்த வள்ளுவரின் கருத்தை எழுதுக.

**பகுதி – இ ( 5 X 8= 40 மதிப்பெண்)**

**பின்வரும் வினாகளுக்கு கட்டுரை வடிவில் விடையளிக்க. (K4/K5)**

16. அ). மதுரைக்காஞ்சியுரைக்கும் மதுரை மாநகர் வளத்தை விவரி.

(அல்லது)

ஆ). மதுரைக்காஞ்சி எடுத்துரைக்கும் நிலையாமைச் செய்திகளை விரித்தெழுதுக.

17. அ) குறுந்தொகை, நெய்தல் பாடல்களான "கடலங்கானல்ஆய", மற்றும் "பெருங் கடற்கரையது சிறு வெண்காக்கை" - பாடற் கருத்தினை விளக்கி வரைக.

(அல்லது)

ஆ). மகற்போகியவழி தாய் இரங்கிய நிலையை ஐங்குறுநூற்றுப் பாடல்கள் வழி எடுத்தியம்புக.

18. அ). நும் பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள பரிபாடல் வழி அறியலாகும் செவ்வேள் குறித்த செய்திகளைக் கட்டுரைக்க. .

(அல்லது)

ஆ). முல்லைக்கலிதரும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

19. அ) இளஞ்சேரல் இரும்பொறையின் சிறப்பினை ஒன்பதாம் பத்து பாடல்களின் வழி விரித்துரைக்க.

(அல்லது)

ஆ). புறநானூற்றில் காணலாகும் பரணர் பாடல்களின் வழி புலனாகும் கருத்துக்களை விவரிக்க.

20. அ).- ஐந்திணை ஐம்பது கூறும் மருதக்காட்சிகளை விவரி.

(அல்லது)

ஆ). உழவு குறித்து வள்ளுவர் உரைப்பனவற்றை எடுத்து மொழிக.

******